★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 1 ஜுலகம் 7 இதழ் 185

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17—8—83

# கைதடி, குருநகர், கிளிநொச்சி முகாம்களில் அகதிகள்!

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளவர்களுக்கு உணவுப் பொருள்கள், உடுபிடவைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகதிகளாக வந்து உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்திருப்போரின் விபரங்கள் யாழ். செயலகத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய அதிகாரிகளிடம் கிடைத்ததும் அகதிகளுக்கு உணவுப் பொருட்கள் உடுபிடவைத் துணிவகைகள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகும். இம்மாதம் 22-ம் திகதி வரையில் இவ்வுதவி அளிக்கும்பணி ஆரம்பமாகும் என சமூகசேவை உதவிப்பணிப்பாளர் திரு. கே. கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

### அகதிகள் முகாம்கள்

இப்பொழுது கைதடியிலும், குருநகரிலும், கிளிநொச்சியிலும் மூன்று அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாதகல் முகாமிலும் அகதிகள் தங்குவதற்கென ஒழுங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்திரா - அமிர் சந்திப்பு: சமஷ்டி அல்லது மாநில சுயாட்சி வலியுறுத்தப்பட்டது

(புதுடில்லி)

**பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்திற்குமிடையில் நடந்த இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தையின் போது தமிழ் ஈழத்திற்குப் பதிலாக குறைந்த பட்சக்கோரிக்கைகளான சமஷ்டி ஆட்சி அல்லது மாநில சுயாட்சி பற்றிப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பிரஸ்தாபித்ததாகத் தெரிய வருகிறது.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரதப் பிரதமருக்கும், திரு. அமிர்தலிங்கத்திற்குமிடையில் சுமார் ஒன்றரை மணிநேரம், முதல் கட்டப் பேச்சுவார்த்தை இங்கு நடைபெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்திய சுதந்திரதின மாகையால் பாரதப்பிரதமர், சுதந்திரதினவைபவங்களில் கலந்துகொண்டதால் பேச்சுவார்த்தை தொடரவில்லை. நேற்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நான்கு அம்சத் திட்டங்கள் பற்றி, ஜனாதிபதியின் பிரதிநிதியான திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, பாரதப்பிரதமரிடம் எடுத்துக் கூறியபோது இவை தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தாததென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன ஐக்கிய அமைப்பின்கீழ் ஒரு மாற்றுத் திட்டம்பற்றிப் பரிசீலனை செய்து ஜனாதிபதி தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி தனிநாடுகோரிக்கைக்கு பதிலாக சமஷ்டி அல்லது மாநில சுயாட்சி கோரிக்கை தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியை பரிசீலனை செய்யுமாறு வலியுறுத்த முயற்சிப்பார் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இவ்விடயம் நேற்று நடந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையின்போது பிரஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் தங்கியிருந்த திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மற்றும் சில அமைச்சர்களையும்சந்தித்து இலங்கை நிலவரம்பற்றி பேசினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## அமிரின் வேண்டுகோளை அடுத்து
# இலங்கைதியாகப் பயணத்தை நெடுமாறன் கைவிட்டார்

(சென்னை)

மதுரையிலிருந்து இலங்கை வரை தியாகப்பயணம் மேற்கொண்டிருந்த தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் தமது பயணத்தை முடித்துக் கொண்டார்.

இவர் தமது யாத்திரையை முடிக்கும்போது இந்தியக் கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் பயணம் செய்திருந்தார். இவர் பயணம் செய்த படகில் திரு. குமரி அனந்தனும் பல தொண்டர்களும் இருந்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து படகுமூலம் இலங்கை வர திரு. நெடுமாறன் புறப்பட்ட போது ஏராளமானவர்கள் கரையிலிருந்து அவரது படகுடன் நீந்தியே வந்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வந்துகொண்டிருந்த போது திரு. அமிர்தலிங்கத்தின் செய்தியுடன் சென்ற பொலிசார் அவரது வேண்டுகோளைத் தெரிவித்தனர். அதன்பின்னர் அவர் தமது யாத்திரையை முடித்துக் கொண்டதாக தெரிவித்த அகில இந்திய வானொலி இராமேஸ்வரத்தில் திரு. நெடுமாறன் கருத்து வெளியிடுகையில் பொலிசார் தன்னை கைது செய்ததாகவே தெரிவித்தனர் என்றும் கூறியது.

திரு. நெடுமாறன் படகில் புறப்படுவதற்கு முன்னதாக தமிழக சபாநாயகர் திரு. ராஜாராம் இராமேஸ்வரத்தில் வைத்து விடுத்த வேண்டுகோளில் தியாகப்பயணத்தை கைவிட்டு திரு. அமிர்தலிங்கத்தை சந்தித்து பேசவேண்டும் என்று கேட்டிருந்தார். அதனை திரு. நெடுமாறன் நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தமிழர் நினைவாக நினைவுத் தூபி!

(இராமேஸ்வரம்)

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை பாதயாத்திரை மேற்கொண்ட தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், இராமேஸ்வரத்தில் இலங்கைத் தமிழர் நினைவாக நினைவுத்தூபி ஒன்றை திறந்துவைத்தார்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களில் பலியான தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்ட இத்தூபிக்கு தமிழக சபாநாயகர் திரு. ராஜாரமும் மலரஞ்சலி செலுத்தினர்.

## தமிழகத்தில் பயிலும்
# தமிழ் மாணவருக்கு தமிழக அரசு உதவும்

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு தற்காலிகமாக நிதி உதவி வழங்குவதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அண்மையில் இலங்கையில் இடம் பெற்ற இனக்கலவரங்களை அடுத்து தமிழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களுக்கு இலங்கையிலிருந்து பணம் அனுப்புவதில் தாமதம் ஏற்படும் என்பதனாலேயே தமிழக அரசு மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது.

## புதுடில்லியில் தலைவர்களை அமிர் சந்தித்துப் பேசினார்

புதுடில்லி, ஆக. 16

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் மற்றும் சில இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழர் நிலை குறித்து திரு. அமிர்தலிங்கம் விரிவாக இவர்களிடம் எடுத்துக் கூறினார்.

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவுடன் திரு. அமிர்தலிங்கம் சுமார் 45 நிமிட நேரம் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது வெளி விவகார அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'காந்தி' படம் அக். 2-ந் திகதி திரைக்கு வரும்

(கொழும்பு)

'காந்தி' திரைப்படம் இலங்கையில் மகாத்மாகாந்தியின் பிறந்ததினமாகிய அக்டோபர் 2-ந் திகதி திரையிடப்படவிருக்கிறது என்று திரைப்படக்கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அன்ரன் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இப்படத்தின் இரு ஆங்கிலப் பிரதிகள் பெறப்படுமென்றும், இலங்கை முழுவதும் இப்படம் திரையிடப்பட்ட பின்னர் தொலைக்காட்சியிலும் காட்டப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

★ அரசாங்க அச்சகத்தில்
# தமிழ் அச்சக வேலைகள் பாதிப்பு

[கொழும்பு]

அரசாங்க அச்சகத்தில்வேலை செய்யும் தமிழ் ஊழியர் இன்னமும் வேலைக்கு வராததால், தமிழ் அச்சகவேலைகள் எதுவும் நடக்கவில்லை.

இதனால் அரசாங்க வர்த்தமானி தமிழில் அச்சிடப்படவில்லை. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும் அச்சிடப்பட்டன.

''தமிழ் ஊழியர் வேலைக்கு வராததால், தமிழ் அச்சு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயினும் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டது.

# 'ஒப்ரேய் தேவன்' சுட்டுக் கொலை!

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக கருதப்படும் ஒப்ரேய் தேவன் ஞாயிற்றுக்கிழமைதிருநெல்வேலியில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்!

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் கொலை செய்யப்பட்ட இவ் இளைஞரின் பூதவுடல் இனந்தெரியாத இளைஞர்களால் எடுத்துச்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பளையில் தென்னம் தோட்டம்விற்பனைக்குண்டு. உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கும் உகந்த இடம் கிணறுகளும் உண்டு. முருகையா, அடம்பன். 8193

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

ஒரு (24''Phillips Black and White Television) கறுப்பு வெள்ளை நிறமுடைய 24'' பிலிப்ஸ் T. V. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். மேலும் விலை விபரங்களுக்கு யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை 21, வேம்படி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 8223

## கல்வி

யாழ்ப்பாண கல்வி நிலையத்தில் வகுப்புகள் வழமை போல் நடைபெறுகின்றன. பழைய மாணவர்கள் உடன் வகுப்புகளுக்கு வரவும். பின் வரும் வகுப்புகளில் புதிய மாணவர்கள் சேரலாம். O/L 83 / 84 சுருக்கெழுத்து, ரைப்பிங், ஆங்கிலம் / தமிழ் மூலம் A/L 84/85 விஞ்ஞானம், கணிதம் வெல்டிங் வயறிங் மோட்டார் மெக்கானிசம் உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 8220

## அந்தியேட்டி அழைப்பு



**சோதிலிங்கம் சோமசுந்தரம் (குட்டி)**

தோற்றம்: 15-3-1958 மறைவு: 6-7-1983

எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியை 19-8-83 வெள்ளிக்கிழமை 6 மணிக்கு ஊறணி அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக்கிரியைகள் பகல் 11மணிக்கு வீட்டிலும் நடைபெறும். உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ரேம். அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின் நன்றிகள்.

**மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரங்கள்.**

ஊறணி. வல்வெட்டித்துறை. (8225)

## பொன்னாலையில் தேர் வெள்ளோட்டம்

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் புதியதேர் வெள்ளோட்டம் இம் மாதம் 21-ம் திகதி நடைபெறவுள்ளது.

## இந்தியா விசாவுக்கு கட்டணம் இல்லை

(கொழும்பு)

இந்தியா செல்லும் இலங்கைப் பிரசைகளிடம் விசா கட்டணம் அறவிடுவதை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.


★ Be Self Employed
★ Organise Small Industries for Your Family
★ Families And Friends Get Together In Medium sized Industries
★ Collect Community saving for Large Scale Industries

WE ARE THERE.....
to advise you to choose a project
to choose your equipment and machinery
to examine it's feasibility
to negotiate for and organise your finance
to sort out administrative and managment problems
Please drop in and see us.

Consultancy And Finance And Development Limited
129, TEMPLE ROAD — JAFFNA
Telephone: 24183


## இன்றைய பலன்

ஆவணி 1ம் திகதி
புதன்கிழமை
(17—8—83)

மேடம்: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும் இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவிற்கு வந்து வேதனையைத்தரும் கடமையில் கவனம் செலுத்தவும்

இடபம்; குளுமையான சம்பவங்கள் இடம்பெறும் வாழ்க்கையில் பசுமை தோன்றும் களஸ்திர வழியாலும் நன்மைகள் வந்து சேரும் காதல்வசப்பட்டவர்களுக்கு கனிவான நாள்.

மிதுனம்; சிறுபிணி வாட்டும் ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்ள நேரிடலாம் வாழ்க்கை இன்று சுமையாகத் தோன்றக்கூடும் சுமாரான தினம்,

கடகம்: கவர்ச்சிகரமான பொருட்களை விரும்புவீர் உள்ளத்தில் இடம் பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு கிடைக்கும் பிதா வழித் தனதானியமும் சேரும்.

சிங்கம்; பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கும் சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கும் வெளியிடத்து தொடர்புகள் வளர்வதற்கு இடமுண்டு.

கன்னி: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகம் பெருகும்.

துலாம்: ஏமாற்றத்தின் அறிகுறிகள் காணப்படும் பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம்பொறுமை நன்று எவருடனும் மௌனமாய் இருக்கவும்.

விருச்சிகம்; சிறிய விடயம் கூட அதிக ஆத்திரத்தை தரலாம் உங்களை சிக்க வைப்பதற்காக சூழ்ச்சிவலை விரிக்கக் கூடும் சிந்தித்துச் செயல்படவும் முதலீட்டைத் தவிர்க்கவும்.

தனு: இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள் பொருள் வரவிற்கும் இடமுண்டு நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

மகரம்: அவப்பெயருக்கு இடமுண்டு குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம் சகோதரம் ஒன்றிற்கு உடல் நலம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில்சுமுகமான நிலைதென்படும்.

கும்பம்: லாபகரமான தொழில்களில் முதலீடு செய்வீர்கள் வாகன சொந்தக்காரர்களுக்கு வருமானத்தில் விருத்தி உண்டு தாய் வழி அன்பு கிடைக்கும்.

மீனம்: குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தேடித்தரும் இதயத்தில் இன்பம் பொங்கும் உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல்வாதி ஆதரவுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.
குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair
Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065



மட்ருஸ் - ரூபவாகினி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தெளிவாக கண்டுகளிக்க வெளிநாட்டில் பயின்ற தொழில்நுட்ப வல்லுநர்களால் ஒருவருட உத்தரவாதத்துடன் ஏரில் அமைத்துக்கொள்ள
வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
நியூவீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(10 மைல் தூரத்திற்குள் வாகனக்கூலி இலவசம்)

## ரூ. 1 லட்சம் இலக்கியப்பரிசு

சென்னை, ஆக. 17

ஒவ்வொரு ஆண்டும் தமிழ் வருடப்பிறப்பன்று தமிழ்ப் படைப்புஇலக்கியமொன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்குவதென்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM
INDIA

லிடோ (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் துணை
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ்'
லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை
ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய
வண்ணப் பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00
சித்தி
20-8-83
ராமன் எத்தனை
ராமனடி

# கையும் மெய்யுமாக பஸ்ஸில் பிடிபட்டார் இளம் பெண்!

## திருடிய சேலையையும் உடுத்திருந்தாராம்!!

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் திருடிய பொருட்களுடன் திருடப்பட்ட அழகான விலையுயர்ந்த சாறியையும் அணிந்துகொண்டு இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்த இளம்பெண் பிரஸ்தாப பஸ்ஸில் வைத்து சாறி மற்றும் பொருட்களை பறி கொடுத்தவரிடமே வகையாக மாட்டிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் செல்லத்துரை புவனேந்திரன் என்பவரது வீட்டில் பகல் வேளை இனம் தெரியாதவர்களால் வீட்டில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த சூட்கேசுடன் கூடிய சுமார் 1,500ரூபா பெறுமதியான பொருட்கள் ஒருவருக்கும் தெரியாத வகையில் திருட்டுப் போயிருந்தது.

இத்திருட்டுச் சம்பந்தமாக வீட்டு உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிசிலும் புகார் செய்திருந்தார்.

வீட்டுச்சொந்தக்காரர் புவனேந்திரன் பளை மலேரியாப் பகுதியில் வேலை செய்பவர். கிளிநொச்சி நோக்கிச்சென்ற இ. போ. ச, பஸ்சில் இவர் பளைக்கு பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது தனக்கு அருகில் அமர்ந்திருந்த பெண் தனது வீட்டில் திருடப்பட்ட சாறியை அணிந்திருப்பதை அவதானித்தார். பிரஸ்தாப பெண்ணிடமே இது பற்றி விசாரித்தார். பஸ்சில் பிரயாணிகள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

திருட்டுப் பொருட்களை வைத்திருந்த பெண்ணைநையப் புடைக்கவும் சிலர் முன்வந்தனர். இதே பஸ்சில் பிரயாணம் செய்த கிளிநொச்சி நீதவான் திரு. கே. கதிரவேற்பிள்ளை தலையிட்டு இருவரையும் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று நீதிமன்ற சார்ஜன்ட் இ. திருவிளங்கத்திடம் விசாரணைக்காக ஒப்படைத்தார்.

தானும் இன்னுமொருபெண்ணும் சேர்ந்தே இத்திருட்டை நடத்தியதாக இப்பெண் விசாரணையின் போது கூறினார்.

மீண்டும் கிளிநொச்சி நீதிமன்றில் இப்பெண் ஆஜர் செய்யப்பட்டபோது இருவாரகால விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மற்றைய பெண்ணைத்தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

## 138 அகதிகள் வவனியா சென்றனர்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருந்த 138 அகதிகள் நேற்று முன்தினம் வவனியாவுக்கு இ.போ.ச. பஸ் வண்டிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வவனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 138 அகதிகளுக்கும், கைதடி முகாமில் தற்போது தங்கியிருக்கும் 292 அகதிகளுக்கும் இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட சாரம், சேலை, பெட்சீட் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (அ)

# இந்தியராஷ்டிரபதி விருந்தில் 'அமிர்'!

புதுடில்லி, ஆக. 16

இந்திய ராஜ்டிரபதி ஸெயில் சிங் தனது இல்லத்தில் 37வது சுதந்திர தினத்தையொட்டி அளித்த விருந்துபசாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் கலந்துகொண்டார். ஸெயில்சிங்கின்விருந்துபசாரத்தில் சோவியத் துணைப் பிரதமரும்கலந்துகொண்டார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இந்திய அமைச்சர்கள், மற்றும் பிரமுகர்கள் இவ்விருந்துபசாரத்தில் கலந்துகொண்டனர்.

## டிசம்பர் வரை இவர்கள் உறுப்பினர்களாக இருக்கலாம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிராமசேவை அலுவலர் திரு. வி. பிரான்சிஸ், சங்கானை வடக்குக் கிராம சேவை அலுவலர்திரு. ஏ.வேதநாயகம் ஆகிய இருவரும் பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாக இவ்வருடம் முடியும்வரை தொடர்ந்தும் இருக்கலாம் என்று கொழும்பிலுள்ள உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் ப. நோ. கூ. சங்கத்தில் இயக்குநர்சபை உறுப்பினர்களாகப் பதவி வகிக்கலாமா என்ற பிரச்னையில் இந்தஇரு கிராமசேவை அலுவலர்களினதும் பிரச்னைகொழும்பிலுள்ள உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சின் முடிவுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரை இவர்கள் இயக்குநர் சபை உறுப்பினர்களாகப்பதவி வகிக்கலாம் என்ற முடிவை கடந்த வாரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ், அரசாங்க அதிபர் ஊடாக இவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது,

சங்க இயக்குநர் சபைக்குப் பொதுமக்கள் சார்பில் உறுப்பினர்களாக இவர்களிருவரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## விஞ்ஞான, கலைமாணி பரீட்சைகள் 29-ம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, கலைமாணிப்பரீட்சைகள் இம் மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

நடைபெறவுள்ள பரீட்சைகள் வருமாறு:-

பொது விசேட கலைமாணிப் பரீட்சை பகுதி I.

வணிகமாணிப் பரீட்சை பகுதி I

விஞ்ஞானமாணி முகாமைக் கற்கை நெறிப் பரீட்சை பகுதி I.

விஞ்ஞானமாணி முதலாண்டுப் பரீட்சை 1983

முதுகலைமாணித் தகுதிகாண் பரீட்சை 1983.

### ஐ. ஸி. எம். ஏ. நவம்பர் பரீட்சை:

## யாழ்ப்பாணத்திலும் நடத்தக் கோரி மகஜர் அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ. ஸி. எம். ஏ. பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து தோற்றவிருக்கும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கோரி லண்டனிலுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மகஜர் அனுப்புவதற்காகக் கழகத்தின் பதிவுபெற்ற மாணவர்கள் நடவடிக்கைமேற்கொண்டுள்ளனர்.

பல வருடகாலமாக லண்டன் ஐ. ஸி. எம். ஏ. பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு வந்தன! வருடத்தில் இரண்டுமுறை நடக்கும் இப் பரீட்சைகளுக்கு ஏறக்குறைய 500 மாணவர்கள் வரை யாழ்ப்பாணப் பரீட்சை நிலையத்தில் தோற்றுவது வழக்கம்.

சென்ற இரண்டு பரீட்சைத் தவணையின்பொழுதும் யாழ்ப்பாணப் பரீட்சை நிலையம் ரத்துச்செய்யப்பெற்று மாணவர்கள் கொழும்பில்வந்து பரீட்சையை எழுதுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்தகைய சூழல் மாற்றம் மாணவர்களுக்குப் பெருமளவு பாதகமாக அமைந்ததென்று கருதப்படுகிறது.

லண்டன் கழகத்திற்கு இலங்கையில் பரீட்சைத் திணைக்களம் முகவராக இயங்கிப் பரீட்சையை நடத்தி விடைத்தாள்களை லண்டனுக்கு அனுப்பிவைக்கும்.

வருகிற நவம்பர் மாதம் இக்கணக்காளர் கழகத்தின் அடுத்த பரீட்சை நடக்கவிருக்கிறது. வருகிற நவம்பரில் நடக்கவிருக்கும் பரீட்சையையும் சென்ற இருமுறை நடந்தது மாதிரி கொழும்புக்கு மாற்றுமல் யாழ்ப்பாணத்திலேயே நடத்தவேண்டுமென்று கழகத்தின் பதிவுபெற்ற மாணவர்கள் பெருந்தொகையில் கைச்சாத்திட்டு ஒரு மகஜரை லண்டன் கழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாகத் தொழில் நடத்தும் அக்கணக்காளர் கழகத்தின் முழுமையான ஒரு உறுப்பினர்மூலம் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

# பஸ் சாரதிக்கு அகதிகள் பாராட்டு

(சுழிபுரம்)

இ. போ. ச. பஸ்சாரதியான பண்ணாகத்தைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரையின் சேவையை சுழிபுரம்-பறாளைக்கு அகதிகளாக வந்தவர்கள் பாராட்டினார்கள். வெகுமதி வழங்க முன்வந்தும் அவற்றை ஏற்க மறுத்துத் தமது கடமை என்றுதெரிவித்தாராம் சாரதி.

சென்ற நான்கு தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து அகதிகளாகக் கப்பலில் வந்த சுழிபுரம் - பறாளையைச் சேர்ந்த குடும்பத்தினர் பலர் வந்தனர். இவர்களில் ஒருவரது சூட்கேஸ் தவறிவிட்டது. தவறிய சூட்கேசில் பெறுமதியான நகைகள், பணம் மற்றும் பல முக்கியமான பத்திரங்கள் நிறைந்திருந்தனவாம். சுமார் ஐம்பதினாயிரம் பெறுமதியெனக்கூறப்பட்டது இவற்றை யாரோ கப்பலிலோ அன்றி பஸ்சிலோ கையாடிவிட்டதாக எண்ணியிருக்கும் வேளையில், யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதி பண்ணாகம் எஸ். பொன்னுத்துரை என்பவர் ''நீங்கள் பஸ் வண்டியில் தவறவிட்ட சூட்கேஸ் இது பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறி அவர்களிடம் கொடுத்தார். இவரது சேவையை யாவரும் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்.

### மனைவிக்கு எறிந்த அம்மிக் குளவி மகளில் பட்டது

# கணவன் தற்கொலை

(கிளிநொச்சி)

மதுபோதை தலைக்கேற அம்மிக் குளவியால் மனைவிக்கு எறிந்த கணவன் மனைவிக்கு அம்மிக்குளவி படாது செல்லமாக வளர்த்த அருமை மகளுக்குப் பட்டு காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மிகுந்த கவலை கொண்டு நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணத்தை தழுவிக்கொண்டார்.

கிளிநொச்சி தொண்டமான் நகரில் வசித்துவந்த கந்தன் சீனிவாசகம் (44 வயது)என்பவரே மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

சீனிவாசகம் மதுபோதையில் வீடுவந்து மனைவியிடம் சண்டையிட்டார் எனவும் திடீரென மனைவிமீது அம்மிக் குளவியைத் தூக்கி எறிந்தார் எனவும்அப்போது எதிர்ப்பட்ட அவரது மகளுக்கு அம்மிக் குளவிபட்டு காயம் ஏற்பட்டதனால் கவலையடைந்து கிருமிநாசினியை அருந்தி மரணமானார் எனவும் மரணவிசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மனைவி சீ. சின்னப்பிள்ளையும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கைதடிமுகாம் சந்திப்புநேரம்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள்முகாமில் தங்கியிருப்பவர்களைச் சந்திக்கும் நேரமாக பிற்பகல் 3 மணி தொடக்கம் 5மணிவரையாக முகாம் நிர்வாகிகள் மாற்றியுள்ளனர்.

அகதிகளாக இங்குவந்தவர்களைச் சந்திக்கும் மக்களின் தொகை தினசரி பெருகி வருவதே இந்த ஏற்பாட்டுக்குக் காரணமாகும் என முகாம் நிர்வாகிகள் தெரிவித்தனர். (அ)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் மருந்து கலவையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். கனகலிங்கம் இம்மாதம் தொடக்கம் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

### மணிவாக்கு

உலக வாழ்க்கையின் துன்ப நிகழ்ச்சிகள் என்னுடைய நெஞ்சைக் கலக்கவில்லை; கடமை உணர்ச்சியையும் வேடிக்கைப் பேச்சையுமே தூண்டிவிட்டன. —அறிஞர் ஷா

## நமது நோக்கு

# நாகரிக வீழ்ச்சி; பண்பாட்டு வளர்ச்சி

'நிலம் என்னும் நல்லாள்' -(Good Earth)— என்ற ஆங்கில நாவலை அதனை எழுதிய பேர்ள் பக் (Pearl Buck) என்ற பெண்மணிக்கு நொபல்பரிசு பெற்றுக்கொடுத்தது. அது ஒரு இலங்கு நூல். பல தடவை வாசித்தாலும் பயன் தரும். அமெரிக்காவைப் பிறந்த இடமாகக் கொண்ட இந் நூலாசிரியை புகுந்த இடமாகிய சீனவையே தன் சொந்த நாடாகக் கொண்டு நீண்ட வாழ்வில் பல அரிய நூல்களை உலகுக்கு அளித்தார்.

தம்முடைய நொபல் பரிசு பெற்ற 'Good Earth' என்ற நாவலுக்கு நாம் தமிழ் முனிவரின் 'நிலம் என்னும் நல்லாள்' என்ற தமிழ்ப் பெயரைச் சூட்டுவதில் பெருமையடைகின்றோம்.

பண்டைய சீன தேசத்தின் பண்பாட்டை சீன மக்கள் தம் முன்னோரைக் கௌரவித்தும் அவர்கள் அளித்த அருஞ்செல்வத்தைப் பேணி வளர்த்தலையும் மூலவேராகக் கொண்டது. இதற்கு எதிர்மாறாக நாட்டில் வாழ்ந்து வந்த மக்கள் நவநாகரிக வாழ்வில் சிக்குண்டு, கடன் பட்டுத், தம் மூதாதையர் சொத்தை விற்றுத் திக்குத் திசை தெரியாது துன்பப்பட்டு வாழ்ந்த சோகக் கதையை ஆன்மிக அடிப்படையில் எளிய, இனிய நடையில் படம்பிடித்த திறமை அந் நூலை உலக இலக்கியத்தில் சிறந்த நூலாக்கிவிட்டன. துன்பம் நம் முன்னேருக்குச் செய்த துரோகம் என்ற அர்த்தம் கொண்டது.

இன்று நாம் இது பற்றிச் சிந்திக்க அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நாகரிகம் பெரும்பாலும் நகரத்தை ஒட்டியேவளரும் வாழ்க்கை முறை; மனிதனின் திறமையால் எழுந்த அற்புதநகரங்கள் நாகரிகத்தின் பிறப்பிடம்; ஆனல் நாகரிக மனிதன் வீழ்ச்சியடைவது வரலாறு விளக்கும் பாடம்; அது இன்று இந்நாட்டில் நடந்தேறியதாக ஜனபதி அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதனை நாம் ஆராய்வதில் காலம் கழிக்காமல் இறைவன் படைத்த பூமியில் கிராமிய வாழ்வு வாழும் நன்மக்கள் மத்தியில் நிலவும் வாழ்க்கை முறையை வேறுபடுத்தி—நாகரிக வாழ்வல்ல அது 'பண்பாடு' என்று கொள்வதில் அர்த்தம் காண்போமாக.

இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த 6000 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதில் ஒரு பரந்த நோக்கமுடைய புனர்வாழ்வுத் திட்டம் தயாராகின்றது.

இதில் குறிப்பிட்ட அம்சங்கள் அனைத்தும் தெய்வப் புலவரின் குறளையே முன் வைத்துள்ளது.

'இலம் என்றசைஇ இருப்பாரைக் காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்'

பூமிதேவி நல்லவள்; நாம் என்னென்னவோ நினைத்து கையில் இருந்தகாணித்துண்டையும்விற்று, நகரமே தஞ்சமென்று வெளியேறிஞேம்; இன்று இந்தக்கதி ஏற்பட்டிருக்கிறது; நாகரிகம் நேற்று முளைத்து இன்று வளர்ந்து நாளை வாடும் பண்டம். இருப்பினும் அது உலகை ஆட்சிவைக்கும் சக்தியாயுமிருப்பதால் அதனை உரியவர்கள் ஆராயட்டும்.

தமிழர்கள் இயல்பாகவே இயற்கை வாழ்வை, கிராமிய வாழ்வை வாழ்பவர்கள்; எனவே தாய் சிரிக்கிருள்; ஆனல் தம்மைக் கைவிட்ட பிள்ளைகளை மீண்டும் கட்டி அணைக்கிருள்.

எல்லோரையும் தாங்கும் வளுக்கு தாராளமனம் படைத்தவர்கள் அனைவரும் இந்த இக்கட்டான நிலையில் வாரி வழங்குங்கள், திட்டத்தைக் கட்டிஎழுப்ப முன் வாருங்கள்!

அது அவ்வாறிருக்க சுமார் 35,000 அகதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்; இவர்களில் சிலர் உற்ருர் உறவினர் நண்பர்களின் உபசாரத்தில் தங்கியிருக்கின்றனர்; ஏனையவர் எங்கள் சமூகத்தின் விருந்தோம்பலை நம்பியிருப்பவர்கள்.

முற்காலத்து சங்கப் பலகைபோல் யாழ்ப்பாணம் இவர்கள் எல்லோருக்கும் போதிய இடமளிக்கத் தவருது; யாழ்ப்பாணம் தமிழ் மக்களின் பண்பாட்டுக்குத் தலைநகரம்; எட்டுத்திக்கும் சென்று பொருளீட்டிவரும் யாழ்ப்பாணத்தானுக்கு முனிவர் இட்ட கட்டளை மனதைவிட்டகலாது. 'விருந்தினர்களை உபசரித்து மிகுதியை உண்ணுகிறவனுடைய வயலுக்கு வித்து வேண்டாம்'' என்று முனிவர் அறுதியிட்டுக் கூறியிருக்கிருர்.

மழையில்லை, மக்கள் பல வகைகளிலும் துன்பப்படுகின்றனர்; தமிழர் பண்பாடு வீழ்சியடைந்துவிட்டதா? எங்கள் நேற்றைய பத்திரிகையில் விடயம் தெரிந்த திரு. நா.மாணிக்க இடைக்காடர் மிகத்தெளிவாக விளக்கிய கட்டுரையில் 'இன்னமும் தமிழர் சிக்கன வாழ்விலும் சிறந்த சிந்தனையிலும் நம்பிக்கை கொண்டுள்ளார்களா? என்று கேட்கிருர். 'இன்னமும்' என்றது அடிவயிற்றைப் பற்றி எரிக்கவல்லது.

ஒரு இடைக்கால வெள்ளம் எங்கள் ஆழ்ந்த சமுத்திரத்தை அள்ளிக்கொண்டு போகமுடியுமா?

நாகரிகம்-ரோம, கிரேக்க சாம்ராச்சியங்கள் - வீழ்ச்சியடையலாம். தமிழர் பண்பாடு தெய்வீகமானது.

### ஒப்ரேய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.

வெலிக்கடைச் சிறையில் கொலையுண்ட குட்டிமணியுடன் முன்னர் நெருங்கிய தொடர்புடையவர் இந்த ஒபரோய் தேவன் என்பதையும் மேற்கண்ட தகவல்களையும் நேற்று முன்தினம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

### புதுடில்லி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலாளர் திரு. லாத்பாயும் கூட இருந்தார். பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமனையும் அமைச்சர் சந்தித்துப் பேசினுர்.

திரு. அமிர்தலிங்கம் மற்றும் சில தலைவர்களையும் சந்தித்துப் பேசியதாகத் தெரிய வருகிறது.

### கைதடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுவருகின்றன.

குருநகரிலுள்ள அகதிகள் முகாம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளது. பத்து குடும்பங்கள் அகதிகளாக இந்த முகாமில் தங்கியிருக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்குடும்பங்கள் தாங்களாகவே சமைத்துச் சாப்பிடக் கூடியளவுக்கு சமூகசேவைப் பகுதியினரால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உணவுப் பொருட்கள்-உடுபிடவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

குருநகர் அகதிகள் முகாமுக்குப்பொறுப்பாக யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் கிறிஸ்தவ தேவாலயத்தில் அமைக்கப்பட்ட முகாமில் 60 குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன. இம்முகாமுக்குப் பொறுப்பாக உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக சமூகசேவை உத்தியோகத்தர் திரு. பொன். நித்தியானந்தன் இருக்கிருர். மற்றும் கத்தோலிக்க நிறுவனங்களும் இந்த முகாமுக்கு உதவிகள் அளித்து வருகின்றன. (மா)

### இந்திரா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புதுடில்லியில் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பும் திரு. ஏ. அமிர்தலிங்கம் சில தினங்கள் சென்னையில் தங்கி தமிழ்த் தலைவர்களை சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி பேசவிருக்கிருர்.

புதுடில்லி வரும்போது சென்னையில் திரு. அமிர்தலிங்கத்தை திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணுநிதியை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. இதனுல் திரு. அமிர்தலிங்கம் இலங்கை திரும்பும்போது தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதி, இலங்கைக்கு 'தியாக யாத்திரை' மேற்கொள்ளமுயற்சித்த திரு. ப. நெடுமாறன் உட்பட மற்றும் பல தலைவர்களையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம்17-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

# "உணவுப் பார்சல்வேண்டாம் பொருட்களாக உதவுங்கள்"

கைதடி அகதிகள் முகாம் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் அங்கு வந்த அகதிகளுக்கு தேவையான உணவு வசதிகளை முகாம் பொறுப்பதிகாரிகளுடன் சேர்ந்து நாம் தயாரித்துக் கொடுத்தோம் பின்பு அடுத்தநாள் நாம் எவருக்கும் அறிவிக்காமலே மக்கள் வெள்ளம் முகாமை சுற்றி படை எடுத்தது. நாங்கள் இந்த முகாமிற்கு தேவையான உதவிகள் பலவற்றையும் செய்யக்காத்திருக்கிரேம். என்று தாமாகவே முன்வந்து உதவி புரிய ஆரம்பித்தார்கள். இவர்

## மக்கள் கருத்து

களின் உதவியில் பிரதானமான உதவியாக முகாமில் இருக்கும் மக்களுக்கு உணவு வழங்குவதாகவே இருந்தது. அதாவது காலையுணவைத் தவிர மதிய, இரவு உணவுகள் தாராளமாகதினமும் அங்கே மக்களால் வழங்கப்பட்டு வருகின்றது. இதனுல் முகாமிலுள்ள எமது சகோதரர்களின் உணவுத்தேவை நிறைவு செய்யப்படுகின்றது.

இத்தகைய உணவுப்பார்சல்களை மக்கள் மிதமிஞ்சி வழங்குவதால் மிகுதியாக வரும் உணவுப்பார்சல்களை அங்கே வெட்டிப்புதைக்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது. கடந்த 14ம்திகதி இரவு இத்தகைய உணவுப் பார்சல்கள் (மிதமிஞ்சிய' பல வெட்டிப்புதைக்கவேண்டிய நிலைஏற்பட்டது.

அது மாத்திரமன்று இம் மாதம் 15ம் திகதியும் முகாமிற்கு கூடுதலான உணவுப் பார்சல்கள் ஒரு பகுதியினரால் விநியோகிக்கப்பட்டது. இவற்றை முகாமில் உள்ளவர்களுக்கு வழங்க முடியாது போகவே முகாம் பொறுப்பதிகாரிகளின் அனுமதியோடு அருகேயுள்ள வயோதிபர் சாலைக்கும் வேறு ஸ்தாபனத்திற்கும் விநியோகிக்கப்பட்டது எனவே இவ்வாறு எமது சேவைகள் ஏன் வீண் விரயமாக்கப்பட வேண்டும்?

தயவுசெய்து அகதிகள் முகாமிற்கு இத்தகைய உதவிகளை செய்ய விரும்புவோர் உணவு சமைப்பதற்கான பொருட்களை தாராளமாக வழங்குங்கள் அங்கே சமைப்பதற்கு ஒரு தொண்டர்குழு இருக்கின்றது. அவர்கள் அங்கு தங்கியுள்ள மக்களுக்கு சமைத்து கொடுப்பார்கள். இதனுல் நீங்கள் வழங்குகின்ற பொருட்கள் பல நாட்களுக்குப் பயன்படும். வீண் விரயங்கள் தவிர்க்கப் படும்.

என். கே. துரைசிங்கம்
''அன்பகம்''
கைதடி மேற்கு,
கைதடி.

### தபால் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன

(கரவெட்டி)

கரவெட்டி, புத்தூர், ஆவரங்கால், கோப்பாய், வட்டுக்கோட்டைதபால் அலுவலகங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன.

மறு அறிவித்தல் வரை இவை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி தபால் அலுவலகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இம்மாதம் ஒய்வூதியம் பெறவிருந்தவர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ, ஐயாத்துரை ஆகியோர் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப் பட்டுள்ளது.

# அமைச்சர்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. ஏ. ஜி. இராஜசூரியரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த நேற்றுமுன்தினம் அமைச்சர்கள் சிலரும் ஐ. தே. க. பிரமுகர்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது, கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா, யாழ். மாவட்ட அமைச்சர் யு. பி. விஜயக்கோன், ஐ. தே. க. பொதுச்செயலாளர் திரு. ஹர்ஷா அபயவர்த்தன, ஐ. தே. க, இளைஞர் அணித்தலைவர் திரு. நந்தலால் பெர்னுண்டோ ஆகியோர் காலஞ்சென்ற இராஜசூரியரினதும், அவரது மகன் பிரபாவினதும் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினர்.

கடந்த வியாழக்கிழமை பெற்ரேலியம் கூட்டுத்தாபனத்திற்குச் சென்று தனது காரில் திரும்பிக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரையும், அவரது மகனையும் சுட்டுக் கொலை செய்தனர்.

இக்கொலைகளின் பின்னர் யாழ். நகரில் சுவரொட்டிகள் மூலம் இக்கொலைக்குத் தாமே பொறுப்பு என்பதைத் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்று அபிவித்துள்ளது.

இரு அமைச்சர்களும் நேற்று முன்தினம் மாலையே கொழும்பு திரும்பினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி - சோமசுந்தரம்

(சண்முகப்பிரியா)

இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் சின்னத்தம்பி சோமசுந்தரம் (சண்முகப்பிரியா) காலமானுர். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பஞ்சாட்சரம், மகேஸ்வரன் (ஜெர்மனி), ஜெகதீஸ்வரி, புவனசுந்தரம், தட்சணுமூர்த்தி, சோதிலிங்கம், ராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, திருக்கேதீஸ்வரன் (சவூதி), கௌரி, குமரகுருபரன் (ஜெர்மனி), முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, குமாரசிங்கம் ஆகியோரின் மாமனுரும், பொன்னம்மா, மனேன்மணி, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னுரின் பூதவுடல் துண்டி மாயானத்திற்கு (கொழும்புத்துறை) 17 - 8 - 83 இன்று (புதன்கிழமை) காலை 10-00 மணியளவில் நம் 15, கச்சேரி கிழக் கொழுங்கை இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 8229